**செய்தி வெளியீடு எண் : 1119** **நாள் : 06.07.2022**

**செய்தி வெளியீடு**

**ஆவின் உப பொருட்கள் விற்பனையை அதிகரிக்கவும், அனைத்து நுகர்வோர்களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யவும் மொத்த விற்பனையாளர்களுக்கு மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் அறிவுறுத்தல்.**

05.07.2022 அன்று, நந்தனம் ஆவின் இல்லத்தில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. சா.மு.நாசர் அவர்கள் தலைமையில் ஆவின் பால் உப பொருட்கள் மொத்த விற்பனையாளர்கள் உடனான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஆவின் உபபொருட்களாகிய நெய், வெண்ணெய், தயிர், மோர், லஸ்ஸி, பனீர், பால்கோவா, ஐஸ்கிரீம், சாக்லேட், டெய்ரி ஒயிட்னர், நறுமணப்பால் போன்ற பால் பொருட்கள் பல்வேறு வகைகளாக பல்வேறு சிப்பங்களில் 215 க்கும் மேற்பட்ட SKU க்கள் தயாரிக்கப்படுவது குறித்து மொத்த விற்பனையாளர்களுக்கு விவரிக்கப்பட்டது

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் மொத்த விற்பனையாளர்களின் கருத்து மற்றும் குறைகளை கேட்டு அதனை விரிவாக விவாதித்தார் மற்றும் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண அதிகாரிகளுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கினார்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவின் பால் உப பொருட்கள் விற்பனையை அதிகரிக்க துரித நடவடிக்கை எடுக்க பல்வேறு அறிவுரைகளை வழங்கினார். பால் உப பொருட்களாகிய தயிர், மோர், லஸ்ஸி, போன்ற அனைத்து பால் பொருட்களின் உற்பத்தி திறன் முழுவதையும் பயன்படுத்தும் விதமாக உற்பத்தி இலக்கினை நிர்ணயித்து விற்பனையை அதிகரிக்க உத்தரவிட்டார்.

இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து பாலகங்களிலும் பால் உப பொருட்கள் இருப்பினை உறுதி செய்ய உத்தரவிட்டார். பால் உப பொருட்கள் தயாரிக்க தேவையான மூல பொருட்கள் தயார் நிலையில் கொள்முதல் செய்து இருப்பில் வைக்குமாறு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஆவின் உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் அவ்வப்போது தங்கள் பகுதிக்குட்பட்ட விற்பனை மையங்கள் மற்றும் பாலகங்களை நேரில் சென்று ஆய்வு செய்து குறைகள் இருப்பின் அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. தென்காசி சு.ஜவஹர் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலைவகிக்க பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர். ந.சுப்பையன், இ.ஆ.ப., அவர்கள், ஆவின் உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in